**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.107/2021**

**2025 ஆம்** வருடம் ஜனவரி மாதம் 27 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகராஜன் | ஜாதி | : | |
| த.பெ | : | உத்தப்பன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | நடுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 45/2025 |

தேதி : 27.01.2025

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு முதலாவது சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். மேலும், 26.07.2021 தேதியிட்ட பாப்பாத்தி அம்மாளிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 06.08.2021 தேதியிட்ட வாதியாகி எனது பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா எண்.2108 அசல் வா.சா.ஆ.2 ஆகவும், இவ்வழக்கின் 1 வது பிரதிவாதி முத்துராஜா என்பவர், பாப்பாத்தி என்பவருக்கு அனுப்பிய கேவியட் மனு சார்பு நகல் வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. எனவே தாவா படி தீர்ப்பும் தீர்பாணையும் பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/.Thiru.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.